# பெண் கல்வியே 'திராவிட மாடல்' ஆட்சியின் அடிப்படை !

## தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலெட்சுமி பெண்கள் கல்லூரி பொன்விழாவில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**தூத்துக்குடி, பிப்.2-**

**பெண் கல்வியே 'திராவிட மாடல்' ஆட்சியின் அடிப்படை என்று கல்லூரி பொன் விழாவில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.**

தூத்துக்குடி எட்டயபுரம் சாலையில் உள்ள ஏ.பி.சி மகாலெட்சுமி பெண்கள் கல்லூரியின் பொன்விழா நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில், தூத்துக்குடி பாராளு மன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, புதிதாக கட்டப்பட இருக்கும் ஆடிட்டோரியம் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்!

அப்போது கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆற்றிய உரை வருமாறு:-

"தலைவர் கலைஞர் துவக்கி வைத்த கல்லூரி இந்த கல்லூரி. அப்போது அவரது பேச்சிலே, '10 ஆசிரியர்கள்,... 126 மாணவர்கள், எந்த விதமான உள்கட்டமைப்பும் இல்லாத இந்த கல்லூரியை நிறுவிய மரியாதைக்குரிய வீரபாகுவின் செயலாற்றல் மீது நம்பிக்கை வைத்து இந்த கல்லூரியை நான் திறந்து வைத்திருக்கிறேன்' என்று இதே வளாகத்திலே நின்று உரையாற்றியிருக்கிறார்.

இந்த கல்லூரியின் 25 ஆவது ஆண்டு விழாவின் போது இந்த கல்லூரிக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார். "இன்று கல்லூரிக்கு அனுமதி வழங்கிவிட்டு, தொடக்க விழாவிலும் கலந்து கொண்டேன். இந்த கல்லூரி இப்போது மிக சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது' என்றும் வாழ்த்து தெரிவித்தார்கள்.

### மனதுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய விழா!

இன்று அவரது மகளாக, இந்த தொகுதியின் மக்களவை உறுப்பினராக இந்த கல்லூரியின் பொன் விழாவில் கலந்துகொள்வது என்பது என்னால் என்றுமே மறக்க முடியாத, மனதுக்கு மகிழ்ச்சியை தரக் கூடிய மன நிறைவை தரக் கூடிய பெருமிதத்தைத் தரக் கூடிய நிகழ்வு.

இந்த கல்லூரியிலே படித்த ஒரு அமைச்சர் இந்த மேடையிலே இருக்கிறார். எத்தனையோ அதிகாரிகள் இருக்கிறார்கள். நாம் பெருமிதப் படக் கூடிய அதே நேரத்தில்... ஒரு பெண் கல்வி பெறுவதற்கு பள்ளிக் கூடம் செல்வதற்கு, கல்லூரிக்கு செல்வதற்கு எத்தனை போராட்டங்களை கடந்து வரவேண்டியிருந்திருக்கிறது என்பதை இன்று நாம் அனைவரும் உணர வேண்டும்.

இன்று பள்ளி முடித்த மாணவியிடம் அடுத்து என்னம்மா பண்ண போறே என்று கேட்டால்., சர்வசாதாரணமாக காலேஜ் என்று பதில் வருகிறது. அதற்குப் பிறகு என்ன பண்ணப் போகிறாய் என்றால் வேலைக்குப் போகப் போகிறேன். இல்லேன்னா அடுத்த டிகிரி படிக்கப் போகிறேன் என்றுதான் பதில் வரும். இதெல்லாம் இன்று ரொம்ப சாதாரணமாக பேசக் கூடிய விஷயம்.

ஆனால் இன்று நாம் இந்த நிலையை அடைவதற்கு நமது முந்தைய தலைமுறையினர் எவ்வளவு போராட்டங்களை, எவ்வளவு தியாகங்களை செய்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்திருக்க வேண்டும். அதை நாம் உணர்ந்தால்தான், இந்த இடம் கிடைத்திருக்கிறதே அதன் மரியாதையை நாம் செலுத்த முடியும்.

### எத்தனை அறிவியல் வளர்ச்சி வந்தாலும் முன்னேறாது!

பெண்கள் அதிகமாக படிக்க அனுப்பப்படாத காலகட்டத்திலேயே பெண்கள் படிப்பதற்காக தொடங்கப்பட்ட கல்லூரி இது, இன்று பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கும்போது சமூகத்தின் சிந்தனை செயல்பாடு ஓட்டம் எல்லாமே மாறும். தனக்காக ஒரு சதுரத்தை உருவாக்கிக் கொண்டு அதற்குள் இருக்கும் சமூகம்... பெண்கள் வெளியே வரக் கூடாது படிக்கக் கூடாது என்று நினைக்கும் சமூகம்... அது எத்தனை அறிவியல் வளர்ச்சி வந்தாலும் அது முன்னேறாது.



நாம் எந்த வளர்ந்த நாட்டின் சமூகத்தை எடுத்துக் கொண்டாலும், அதன் அடிப்படையாக பெண் கல்வி இருக்கும். திராவிட மாடல் என்று நம் முதல்வர் பெருமையாக சொல்கிறாரே, நம் ஆட்சியின் அடிப்படையே பெண்கல்விதான். இந்த சமூகத்துக்கு வெளியே கல்விக்கு வெளியே யார் யாரெல்லாம் விடுபட்டவர்களாக இருந்தார்களோ அவர்களை எல்லாம் இன்று உள்ளே கூட்டி வந்து அவர்களுக்கும் கல்வி தந்து பெண்களை 'எம்பவர்' செய்வதுதான் பெண் கல்வியின் அடிப்படை. அதை நாம் ஒவ்வொரு நாளும் மனதிலே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

### ஜோதிராவ் பூலே!

ஏனென்றால் நீங்கள் இப்போது உட்காந்திருக்கிற இடத்துக்கு அவ்வளவு வரலாறு இருக்கிறது. ஜோதிராவ் பூலே பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். மகாராஷ்டிராவில் பெண் கல்விக்காக தங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்துக்கொண்ட தம்பதி அவர்கள்.

அவருடைய மனைவி முதல் முறையாக பள்ளிக் கூடத்துக்கு போகிறபோது திருமணத்துக்குப் பிறகுதான் பள்ளிக்குச் செல்கிறார். அப்படி செல்கிறபோது இரண்டு சேலைகளை எடுத்துக் கொண்டு போவார். ஒன்றை கட்டிக் கொண்டு செல்வார். இன்னொன்று மாற்றுக்கு எடுத்துச் செல்வார். ஏனென்றால்... அவர் வீட்டில் இருந்து பள்ளிக் கூடம் செல்லும் அவரை அவர் மீது சேறு, சகதி, அழுக்கு என்று கண்டதையும் வீசி எறியும் அந்த கால சமூகம். ஏனென்றால் ஒரு பெண் பள்ளிக் கூடம் சென்று படிக்கக் கூடாது என்பதற்காக. அதனால் அவர் மாற்று சேலையையும் எடுத்துச் செல்வார். வீடு திரும்பும்போதும் இதேபோல சேறு வீசுவார்கள்.

இன்று இந்த சமூகம் கல்வியை மிக சாதாரணமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால், அந்த போராட்டம் அதன் வரலாறு என்ன என்பதை நாம் புரிந்துகொண்டால்தான் இந்த இடத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று கல்வி நமக்கானது, நம்மை வளர்த்துக் கொள்ளக் கூடியது. வேலைக்கு போவதற்காக மட்டுமே நாம் படிக்கவில்லை. நம் உலகத்தை விரிவாக்குவதற்காக நாம் நம்மை புரிந்துகொள்வதுதான் கல்வி நமக்கு தரக் கூடிய மிகப்பெரிய கொடை. இந்த பயணத்தில் உங்கள் கனவுகளை எந்த காரணத்துக்காகவும் யாருக்காகவும் விட்டுக் கொடுத்துவிடாதீர்கள். சில நேரம் நமக்கு கவனச் சிதறல்கள் இருக்கும். அதுவும் வாழ்வின் ஒரு பகுதிதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதையும் தாண்டி நீங்கள் எந்த இலக்கை அடைய நினைக்கிறீர்கள், உங்கள் கனவுகள் என்ன என்பதை தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால் இன்று உங்கள் கையிலேயே கவனச் சிதறல் இருக்கிறது.

### சோஷியல் மீடியா பிரஷர்!

உங்கள் கையில் இருக்கும் சோஷியல் மீடியா, இணையம் என்பவை உலகத்தின் கதவுகளை உங்களுக்கு திறக்கின்றன. எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் எங்கேயும் போய் தேடவேண்டியதில்லை. அதை செல்போனில் எடுத்துவிட முடியும். அதேபோல கம்யூனிகேஷன் தகவல் தொடர்பும் நமக்கு கிடைக்கிறது. அதேநேரம் அதில் சில சிக்கல்களும் இருக்கின்றன.

இன்ஸ்டாகிராமிலோ வேறு சோஷியல் மீடியாவிலோ ஒரு போஸ்ட் போடுவீர்கள். அங்கே நாம் நமக்கென ஒரு பிரஷர் க்ரூப்பையும் நாம் உருவாக்கிக் கொள்கிறோம். நம்முடைய ஃபாலோயர்களின் கருத்துகள், கமெண்ட்டுகள் நம் மீது ஒரு ப்ரஷராக மாறக் கூடிய சூழல்கள், வாய்ப்புகள் இருக்கிறது.

ஒரு விஷயத்தை நாம் சொல்லும்போது லைக் போதவில்லை என்ற உணர்வு நம்மை பாதிக்கும். சில ஆண்டுகளுக்கு முன் நம்மைச் சுற்றி பிசிகல் ப்ரஷராக இருந்தது, இன்று நம்மைச் சுற்றி கண்ணுக்குத் தெரியாத சோஷியல் மீடியா ப்ரஷராக இருக்கும். அதை நாம் உடைக்க வேண்டும், கடக்க வேண்டும்.

ஒரு பெண் வாழ்வில் சாதிக்க வேண்டுமென்றால் அது மனத் தடையாக இருக்கட்டும், பாரம்பரியம் என்ற தடையாக இருக்கட்டும், சமூகம் என்ற தடையாக இருக்கட்டும், சாதி மதம் என்ற விஷயங்களை எல்லாம் உடைத்து எறிந்தால் தான் அந்த சாதனையை நாம் செய்ய முடியும் என்று தந்தை பெரியார் வலியுறுத்தியிருக்கிறார்.

### பெரியாரின் புத்தகத்தை அவசியம் படியுங்கள்!

தந்தை பெரியாரைத் தாண்டி ஒரு ஃபெமினிஸ்டை நான் இதுவரை படித்ததில்லை. என்ன தடையாக இருந்தாலும் அதை உடை என்று சொன்னார் பெரியார். எல்லாருமே பெண்கள் என்றால் ஒரு லிமிட்டேஷன் வைத்திருப்பார்கள். ஆனால் அதுபோன்ற எந்த ஒரு சமரசமும் இல்லாமல் சிந்தித்தவர் பெரியார். அவர் எழுதிய, 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற புத்தகத்தை தயவு செய்து எல்லா பெண்களும் படியுங்கள்.

இங்கே அமைச்சர் பேசும்போது தமிழ் துறையை பற்றி பேசினார்கள். பெரிய ஆரவாரத்தோடு அதற்கு மாணவிகள் ரெஸ்பாண்ட் செய்தார்கள். பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் பொதுவாகவே எல்லா கல்லூரிகளிலும் தமிழ் துறை என்பது பாவமாக ஒரு ஓரமாக இருக்கும். ஆனால் இந்த கல்லூரியிலே தமிழ் துறை பவர் ஃபுல் துறையாக இருப்பது பெரிய மகிழ்ச்சி.

ஆங்கிலத்தில் டிபேட் செய்தால், ஆங்கிலத்தில் கவிதை எழுதினால் அது பெருமையாக கருதப்படுகிறது. ஆனால் இன்றைக்கு நமது முதலமைச்சர் தமிழின் தொன்மையை மிகப் பெருமையாக அறிவித்தார்கள்.

நமது தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில்தான் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் முதல் முறையாக இரும்பு பயன்படுத்தப்பட்டது. இந்த பெருமை இருக்கக் கூடிய மாவட்டம், இந்த பெருமை இருக்கக் கூடிய தமிழினம் நாம். அந்த தமிழினத்தின் வழிவந்தவர்கள் நீங்கள். தமிழ் துறை மட்டுமல்ல...நாம் எல்லாரும் தமிழர்கள்தான்., நாம் எல்லாரும் பெருமைப்பட வேண்டும்.

அதனால், நம்மை யாரும் அடக்கிவிட முடியாது. அது ஆண்களாக இருக்கட்டும், பெண்களாக இருக்கட்டும். பெண்களை எதுவும் அடக்கிவிடவோ, நிறுத்திவிடவோ, பின்னால் இருந்து இழுக்கவோ அனுமதிக்காதீர்கள். முன்னேறுங்கள், உலகை வெற்றி கொள்ளுங்கள். வாழ்த்துகள்" இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார். இதில் அமைச்சர் பெருமக்கள் கீதா ஜீவன், அனிதா இராதா கிருஷ்ணன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கல்லூரி தலைவர் ஏ.பி.சி.வி.சொக்கலிங்கம், காங்கிரஸ் மாநில துணைத் தலைவர் ஏ.பி.சி.வி.சண்முகம், கல்லூரி முதல்வர் கே.சுப்புலெட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

ஏழை எளிய தொழிலாளர்கள் வாழ்க்கையை உயர்த்தும் வகையில் கலைஞர் கைவினைத் திட்டத்தைத் தந்த

# முதல்வருக்கு - தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்கம் நன்றி !

## சங்கச் செயலாளர் எம்.ருக்மாங்கதன் நன்றி!

காஞ்சிபுரம், பிப். 2-

தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்கச் செயலாளர் எம்.ருக்மாங்கதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஏழை எளிய தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் எங்கள் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரிலே தங்கள் சிந்தனையில் உதித்த திட்டம் கலைஞர் கைவினை திட்டம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் ஏழை எளிய மக்களின் அரணாக நின்று கலைஞர் கைவினை திட்டம் என்னும் முத்தான திட்டத்தை தந்து சமூக நீதி உரிமைகளை நிலைநாட்டுகின்ற வகையில் வரலாறு படைத்து வான் புகழ் போற்றும் வல்லமை பெற்ற தலைவராக தங்களை காண்கிறோம்.


கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இன்னமும் ஏற்றம் கண்டிராத சவரத் தொழிலாளர்களின் வாழ்வில் சங்கநாதமாய் வாழ்க்கையை வளமாக்கும் விதமாய் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் கார்ப்பரேட் கடைகளுக்கு இணையாக தொழில் வளத்தை நவீனப்படுத்தும் விதமாக தொழில் பயிற்சியும் தந்து மானியத்துடன் கடன் உதவியும் அளிக்கும் திட்டத்தை அள்ளித்தந்த வள்ளலே தங்களை நாடு முழுவதும் உள்ள சவரத் தொழிலாளர்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள் நாடறியும் வகையில் தங்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

நாளை பிப்ரவரி 3, அண்ணா நினைவு நாள் !

# மேடையிலே மின்னும் அண்ணா நினைவுகள்!



அறிஞர் அண்ணா பேசிய மேடைகள், அரங்குகள் ஆயிரமாயிரம்! அந்த மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றின் மணமும், குணமும் இன்றும் மாறாமல் தவழுகின்றன!

சங்க காலத்திலே ஆராய்ச்சியின்
அரணாக விளங்கிய
தமிழ்நாடே எனினும், தத்துவங்கள்
எத்தனை தித்திக்கும்
இயல்பினதாயினும், துருவிப் பார்க்கும்
குணங்கொண்ட
தமிழ்நாடே எனினும், 'நெற்றிக்
கண்ணைக் காட்டினும்
குற்றம் குற்றமே' என்ற நக்கீரர்
வாழ்ந்த நாடே எனினும்,
வள்ளுவர் வாழ்ந்த தமிழ்நாடே
எனினும், இந்தப் பத்து
ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் சுயமரியாதை இயக்கத்
திற்கீடான முயற்சி, தமிழ்நாட்டிலே இதற்குமுன் தோன்றவே இல்லை;

என்று உறுதியிட்டு, பொது வாழ்வில் முதல் தலைமைப் பொழிவாக, ஓங்கி ஒலித்த அண்ணாவின் 28 வயது இளங்குரல், இன்னமும் துறையூர் மேடையின் இன்னமுத நினைவினில் துலங்குகிறது!

**நாம் பகுத்தறிவையே ஆயுதமாகக் கொண்டு, இந்திய**
**மத ஏகாதிபத்தியத்துடன் கடினமான போர் துவக்கினோம்.**
**நமது எதிரிகள், புராணங்களையும் பழைய பழக்க வழக்கங்**
**களையும் ஆயுதங்களாகக் கொண்டு நம்மைத் தாக்கினர். நாம்**
**மக்கள் சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு**
**தாழ்வும் இருக்கக் கூடாது என்றோம். அவர்கள் உயர்வு தாழ்வு,**
**மத சாஸ்திர புராண இதிகாச ஆதாரம் பெற்று நெடுநாட்களாக**
**இந்த நாட்டிலே நிலவி, சக்கரவர்த்திகளாலும்**
**ஒப்புக் கொள்ளப்பட்டு, காப்பாற்றப்பட்டு வந்தது என்றனர். அறிவு,**
**ஆராய்ச்சி,அனுபவம் இவைகளையே உறுதுணையாகக்**
**கொண்டு சமூக வாழ்வை நடத்த வேண்டுமென்று நாம்**
**கூறினோம் - மனு சொன்னபடி நடப்பதே மதக் கட்டளை**
**என்றனர் அவர்கள்;**

என்று நாமக்கல்லில் அண்ணா அன்று காட்டிய நாநயம், பளிச்சென உணர்த்திய பகுத்தறிவுப் பண்பு நலன், குன்றின் மேலிட்ட விளக்காக நம் நினைவில், குறைவிலா வெளிச்சத்தைக் கொட்டிக்கொண்டே இருக்கிறது!

கலை, ஓர் இன மக்களின் மனப்பண்பு; இவ்வின மக்கள்
இடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகியவற்றின் எடுத்துக்
காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும்
விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிபு.
கலை உலகில், அவ்வப்போது மாறுதல் உண்டாகும்.இனத்துக்கோர்
கலையும், இடத்தின் இயல்பு, தட்பவெப்பம் ஆகியவற்றுக்கு
ஏற்ற முறையிலும், கலை உண்டாகும், வளரும், மாறும்.
இந்தியா என்ற இந்த உப கண்டம், பல இனங்கள் வசிக்கும்
இடம். ஆகவே இங்கு பல கலைகள் உண்டு.இனத்திற்கோர்
கலை என்றுண்டு.எனினும், இரு பெரும் கலைகள் இங்கு
உள்ளன என்று அறிவாளிகள் கூறியுள்ளனர். ஆரியக் கலை
ஒன்று, திராவிடக் கலை பிறிதொன்று;

என்று, சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் அண்ணா, கலைக்கு இலக்கணம் வகுத்ததையும், திராவிடக் கலையின் தனிப் பெரும் தன்மையினைத் தக்கபடி எடுத்துக் காட்டியதையும், கற்றறிவாளர் மறவாது நினைவில் வைத்து, களிபேருவகை கொள்வார் அன்றோ!

**திராவிடரின் விடுதலைப் படையிலே நாங்கள் பெயரைப் பொறித்துவிட்டோம்! எந்தச் சமயத்திலே அழைப்பு வருமோ அறியோம். வந்தால் வாளாயிரோம், அது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலையாக இருக்கக்கூடும்; எதுவாக இருக்குமோ தெரியாது! ஆனால் எதற்கும் நாங்கள் தயார் என்று உறுதி கூறிவிட்டோம்;**

என்று, திருச்சியிலே 75 ஆண்டுகளுக்கு முன்னர், அண்ணா எழுப்பிய இன்ப திராவிடப்போர்க்குரல், இன்னமும் மலைக்கோட்டை மறவாமல் எதிரொலிக்கிறது!

பாரதிதாசன், மேல்நாட்டுக் கவிகளைப் போல் கலையைக்
காலத்தின் கண்ணாடி ஆக்குகிறார்.காலத்தையே சிருஷ்டிக்
கிறார் என்பது மாத்திரமல்ல; காலத்தை மாற்றுகிறார்.
காலத்தை மாற்றுகிறார் என்பது மட்டுமல்ல; மாறிய
காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார்; அது மாத்திரம்
அல்ல, சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத் தள்ளுகிறார்.
தென்றல் வளரும், நிலவு வளரும், செல்வம் வளரும்.அவை
போல, அவரது கவிதைகளும் வளர வேண்டும்;

என்று, பாவேந்தரின் கவிதைகள் கால மாற்றத்திற்கான கருவிகள் என்பதை அண்ணா எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, பாவேந்தரைப் படித்தவர்கள் ஏராளம், ஏராளம்.அவர்களால் பாரதிதாசன் பரம்பரை என்ற ஒன்றே உருவாயிற்று. இன்றும் அது வளருகிறது.பாவேந்தரைப் படிக்கும்போதும், அவருடைய பரம்பரைப் பாவலர்களின் ஏடுகளைப் பார்க்கும்போதும், அண்ணாவின் நினைவு நெஞ்சத்திலே நிழலோவியமாக வளருவதைத் தடுத்திட இயலாது.

**ஏ தமிழ்நாடே! ஏ தாழ்ந்த தமிழ்நாடே! தேய்ந்த தமிழ்நாடே!**
**தன்னை மறந்த தமிழ்நாடே! தன்மானமற்ற தமிழ்நாடே! நன்றி**
**கெட்ட தமிழ்நாடே! கலையை உணராத தமிழ்நாடே! கடவுளின்**
**லட்சணத்தை அறியாத தமிழ்நாடே! மருளை மார்க்கத் துறை**
**என்றெண்ணிடும் தமிழ்நாடே! ஏ, சோர்வுற்ற தமிழ்நாடே! வீறு**
**கொண்டெழு! உண்மைக் கவிகளைப் போற்று! உணர்ச்சிக்**
**கவிகளைப் போற்று! புரட்சிக் கவிகளைப் போற்று!!**
**புத்துலகச் சிற்பிகளைப் போற்று!!!** ;

என்று, அறிஞர் அண்ணா அவர்கள் 1945ல் குமுறிக் கொள்கை முழங்கியதற்குப் பிறகுதான், நம் நாட்டில் சிந்தனைப் புதுவெள்ளம் சீறிப்பாய்ந்திடலாயிற்று.அதனால் அளப்பரிய பயனுற்றோர், பயனுற்றோரின் பண்பட்ட பாரம்பரியத்தினர் நினைவில் அண்ணா, நித்தமும் நிலவைப் போல முகிழ்க்கிறார்! அது மட்டுமல்ல, **'ஏ! தாழ்ந்த தமிழகமே!'** என்று அண்ணா முழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா அரங்கம் இன்னமும் அந்தப் பெரு முழக்கத்தை நினைவில் ஏந்தி எதிரொலித்துக் கொண்டிருக்கிறது!

**சென்னை முதல் கன்னியாகுமரி வரை, பட்டினங்கள் முதல் பட்டிக் காடுகள்வரை, எத்தனையோ மேடைகள்! 'தொழுதூர் வந்தோம், பொழுது விடிந்தது' என்று அழகொழுகும் அற்புதத் தமிழில் எழுதுமளவுக்கு, இரவும் பகலும் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அரிய உரைகள்! கரைகாணாக் கடல் போலே, அதில் ஆர்ப்பரிக்கும் அலைகள் போலே, காலத்தின் நினைவில் நிரந்தரமாக ஒலி எழுப்பிக்கொண்டே இருக்கின்றன!**

★ ★ ★

கி.இராஜமாணிக்கம்

★ ★ ★